உ

சிவமயம்

# சிவாலய தரிசனவிதி



ஆக்கம் :

**விழிசைச்சிவம்**


வெளியீடு :

மாவையாதீனம்

அச்சுப்பதிவு :

குகன் அச்சகம் தெல்லிப்பழை

கலியப்தம் 5090

விபவ ஞூ ஐப்பசி மீ கஉ உ

1988 - 10 - 28

[விலை: ரூபா 5/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. சி

உ

குகமயம்

# ஆசியுரை

சைவத்துக்குந் தமிழுக்கும் உயிர்கொடுத்த நாடு இந்த ஈழ நாடு. வன்கண்ணரான மிலேச்ச அரசுகள் இருந்த காலங்களிற் சைவத்தையும் தமிழையுங் காக்கப் பெருந் தியாகங்கள் செய்தவர்களால் விழிசிட்டிக் கிராமம் சிறப்புப் பெறுகிறது. விழிசிட்டி வாழ் மக்கள் சைவமரபு பேணும்பரம்பரையினர். குருபக்தி மிக்கவர்கள். தூய ஈஸ்வரபக்தி நிறைந்தவர்கள். தருமந் தெரிந்தவர்கள். உலகம் வணங்குஞ் சீலம் உடையவர்கள். சைவப் பேரறிஞர்கள். இத்தகைய அரும்பெருங் கொடைகளைக் கொண்ட வம்சத்திலே தோன்றியவர்தான் சைவப் பேராசான் உயர்திரு சிவசுப்பிரமணியம் அவர்கள். அவர் ஓர் உபாத்தியாயராயினும் மேலான உபாத்தியாயர் ஆவார். தூயஅறிவு, அருட்பணி, அன்பு ஆகியவற்றோடு அமைதியான வாழ்வை இனிதே நடாத்தும் இம்மகான் கீரிமலை நகுலேஸ்வர சுவாமி கோயிலில் நீண்டநாட்களாக இயற்றி வரும் தவப்பணிகளின் பெறுபேறுகளைப் பெற்றிருப்பதும் ஒரு பெரும் பொக்கிஷமே.

நாரின்றி மாலையில்லை. அன்பின்றி ஒற்றுமையில்லை. நிலமின்றி மனையில்லை. அறமின்றி நலமில்லை. வானின்றி வளமில்லை. அருளின்றி உலகில்லை. இவைபோலப் பலவாறு கூறுகின்றன வேத சாத்திரங்கள். சான்றோர்களான நன்மக்கள் வாழ்வதனாற்றான் உலகமும் உய்ய வாய்ப்புப் பெறுகிறது. உடற்பற்றின்றி இறைப்பற்றுடன் வாழும் இப்பெரியாரும், இவரைச் சூழ்ந்தவர்களும் சைவம்வாழ, சமயம் செழிப்புற, சைவமக்கள் மனோதைரியத்துடன் தத்தமது தர்மங்களை ஆற்ற, இவற்றினால் அருமையான சைவ உலகைத் தோற்றுவிக்க ஆற்றும் தொண்டுகளோ மகோன்னதமானவை.

இந்தவகையில் ''சிவாலய தரிசனவிதி'' என்னும் நூல் இப்போது வெளிவருகிறது. இலகுவான தமிழில், இளைஞர்களும் விரும்பிப் படிக்குமளவிற்கு இந்நூலின் விஷயதானங்கள் நன்கு விபரிக்கப்பட்டிருக்கின்றன. சைவ வாழ்க்கைக்கு உறுதுணைதரும் பல்வகை நெறி முறைகளும் உணர்ந்து படிக்கும்போது அவை வேரூன்றிப் பயன் விளைக்கும் வகையிலும் இச்சிறுநூல் தயாரிக்கப் பட்டுள்ளது. ஒருவர்க் கொருவர் உதவி செய்யாவிட்டால் உலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை நடைபெறுது. அந்த உதவிகள் சைவ மாண்போடு அவற்றினைச் சார்ந்ததாயிருக்குமாயின் அதுவே நல்லறமாகவும் விளங்கும். தக்க காலத்தில் ஆசிரியர் அவர்கள் வெளியீடு செய்து வைக்கும் ''சிவாலய தரிசனவிதி'' என்னும் சிறந்த சமயவழிகாட்டி நூலினைச் சைவ உலகிற்கு இப்போது தந்துதவுகிறார். சைவ சமயத்திற் பிறந்த ஒவ்வொருவரும் இந்நூலினை விரும்பி ஏற்று வாசித்து உரிய பயனைப் பெறுவதுடன் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆக்கந்தரும் இந்நூல்போன்ற பிற வெளியீடுகளுக்கும் தக்க ஆதரவளிப்பார்களாயின் அதுவே பெரும் புண்ணியச் செயலாகும்.

நல்லாசிரியர் சிவசுப்பிரமணியம் அவர்களும், அவரது குடும்பத்தினரும் சகல செளபாக்கியங்களையும் பெற்று இனிதே வாழ மாவை மஹாவல்லி கஜவல்லி சமேத சுப்பிரமண்ய பரமேஸ்வரன் நிறைந்த திருவருளை வாரி வழங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

**மஹாராஜஸ்ரீ க. து. ஷண்முகநாதக் குருக்கள்**
ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவும்

மாவையாதீனம்
கலியுகம் 5090
பாத்திரபதம், 20ஆம் நாள்
பூசம், புதவாரம்,
*(5-10-88)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவாலய தரிசன விதி

## முன்னுரை

சில மாதங்களின் முன் சைவாபிமானி ஒருவர் என்னைச் சந்தித்து ''இக்காலத்திலே பலருக்குச் சிவாலய தரிசன முறைகள் தெரியாது. நந்தி, பலிபீடம், கொடித்தம்பம் என்பவற்றின் தத்துவங்கள் தெரியாது. இன்ன மூர்த்திக்கு இன்ன தோத்திரம் படிக்கலாம் என்பது தெரியாது. ஆதலால் இவைகளையெல்லாம் அடக்கி ஒரு சிறு நூல் எழுதி வெளியிட்டால் பலருக்குப் பிரயோசனப்படும்'' என்று கூறினார். யான் ''இது கஷ்டமான வேலை, ஆறுதலாகச் சிந்தித்துச் செய்வோம்'' என்று கூறி, விட்டுவிட்டேன். பல நாட்களின்பின் அவர் என்னை மறுமுறை சந்தித்து ''நான் கூறிய விஷயத்தை மறந்துவிட்டீர்களோ?'' என்று கேட்டார். நான் ''மறக்கவில்லை, ஒரு நூலை எழுதி அச்சிடுவதென்பது இக்காலத்தில் அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஆலோசித்துத் தொடங்குகிறேன்'' என்று கூறினேன். அவ்வாறே அவரது வேண்டுகோளுக்கியையச் சைவவினாவிடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம், சைவபோதம் இரண்டாம் புத்தகம் என்னும் நூல்களையும், வேறு சில நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு இந்நூலை எழுதினேன்.

பின்பு இந்நூலை எழுதும்படி தூண்டிய சைவாபிமானியிடம் சென்று எனது கையெழுத்துப் பிரதியைக் காட்டினேன். அவர் வாசித்துப் பார்த்துத் திருப்தியுற்றார். இந்நூலை அச்சிடும் செலவைப் பொறுப்பீர்களா?'' என்று கேட்டேன். அவர் ''முழுச் செலவையும் பொறுக்கமுடியாது, என்னால் இயன்றதைத் தருவேன்'' என்றார். நான் அதனைக் கேட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன்.

சில நாட்களின்பின் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களிடம் சென்றேன். நடந்த வரலாற்றைக் கூறினேன். கையெழுத்துப் பிரதியையும் காட்டினேன். அவர்கள் அதனை வாசித்துப் பார்த்துவிட்டு ''இக்காலத்துக்கு இப்படியான ஒரு நூல் அவசியமே. நாம் எமக்குக் கிடைக்கும் குருதட்சணையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட ஒரு பகுதியை இவ்வாறான சமய வளர்ச்சி சம்பந்தமான காரியங்களுக்காக ஒதுக்கி வருகிறோம். ஆதலால் இந்நூல் அச்சிடும் செலவைத் தருவேன்'' என்றார்.

நான் குருக்கள் ஐயா அவர்களது அன்பையும் ஆதரவையும் சமய வளர்ச்சியில் அவர்களுக்கிருக்கும் ஆர்வத்தையுங்கண்டு மனம் மகிழ்ந்தேன். ''கையெழுத்துப் பிரதியை ஆறுதலாக இன்னுமொரு முறை பார்த்துவிட்டு ஒரு ஆசியுரை எழுதித் தாருங்கள்'' என்று கூறிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன்.

ஆசியுரை கிடைத்தது, நூலின் ஆரம்பத்தில் அந்த ஆசியுரை இடம்பெறுகிறது. மாவை ஆதீனகர்த்தாவாகிய குருக்கள் ஐயா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

''சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண்ணல், பிறன்மனைவிழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய், குருலக்கணங் குறைவற அமைந்த சைவாசாரியரை அடைந்து சிவதீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய், விபூதி ருத்திராக்ஷ தாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீ பஞ்சாக்ஷரசெபம், சிவத்தியானம், சிவாலயசேவை, சிவலிங்கபூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுரபூசை, முதலியனவற்றைச் சிவாகமவிதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்களென்று சொல்லப்படுவார்கள்'' எனப் பெரியபுராண வசனத்தின் முகவுரையிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே நாமெல்லாம் சைவர்களா? என்று சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். சைவர்களாதலே முதலிற் செய்யவேண்டிய கருமமாகும். அதன்பின்புதான் ஆலயதரிசன விதியை ஆராய்வது பயனுடைத்தாகும்.

என்சிற்றறிவிற் கெட்டிய வகையில் இச்சிறு நூலை ஆக்கியுள்ளேன். அறிஞர்கள் பார்த்துப் பிழைகள் இருப்பின் எனக்கு அறிவித்தால் ஏற்றுக்கொள்வேன்.

விழிசிட்டி, **செ. சிவசுப்பிரமணியம்**
தெல்லிப்பழை. ஆக்கியோன்
12 - 10 - 88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சிவாலய தரிசன விதி

## (சைவவினுவிடை — இரண்டாம் புத்தகம்)

1. திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துச் சந்தியாவந்தனம் முதலியன முடித்துக்கொண்டு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலே, கர்ப்பூரம் முதலிய வைக்கப்பட்ட பாத்திரத்தைத் தாமே எடுத்துக்கொண்டேனும், பிறரால் எடுப்பித்துக்கொண்டேனும், வாகனுதிகளின்றி நடந்துபோதல் வேண்டும்.

2. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே யாது செய்தல் வேண்டும்?

கால்களைக் கழுவி ஆசமனஞ்செய்து தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துச் சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

3. திருக்கோயிலுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?

பலிபீடத்தையும் துசத்தம்பத்தையும் இடபதேவரையும் கும்பிட்டுப் பலிபீடத்துக்கு இப்பால் வடக்கு நோக்கிய சந்நிதியாயினும், மேற்கு நோக்கிய சந்நிதியாயினும் இடப்பக்கத்திலும், கிழக்கு நோக்கிய சந்நிதியாயினும் தெற்கு நோக்கிய சந்நிதியாயினும் வலப்பக்கத்திலும் நின்று, அபிஷேக சமயம் நிவேதன சமயமல்லாத சமயத்திலே, ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று தரமாயினும், ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். நமஸ்காரம் ஒரு தரம் இருதரம் பண்ணல் குற்றம்.

4. அட்டாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

5. இந்த நமஸ்காரம் எப்படிப் பண்ணல் வேண்டும்?

பூமியிலே சிரசை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்தல் வேண்டும்.

6. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்தவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

7. நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?

எழுந்து, இரண்டு கைகளையும் மார்பிலேனும் சிரசிலேனும் குவித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு கால்களை மெல்ல வைத்து மூன்று தரமாயினும் ஐந்துதரமாயினும், ஏழுதரமாயினும் ஒன்பது தரமாயினும், பதினைந்து தரமாயினும் இருபத்தொரு தரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணி மீட்டும் சந்நிதானத்திலே நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

8. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?

முன்பு துவாரபாலகரை வணங்கி, பின்பு கணநாயகராகிய திருநந்தி தேவரை வணங்கித் துதித்து "பகவானே உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அநுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு, உள்ளே போய் முன் விக்கினேசுரரைத் தரிசனஞ் செய்து, பின் சிவலிங்கப் பெருமான் சந்நிதியையும் உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து, ஆதி சைவரைக்கொண்டு அருச்சனை செய்வித்துப் பழம், பாக்கு, வெற்றிலை முதலியனவற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணித் தரிசனஞ் செய்து விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு அதன்பின் சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர்முதலிய மூர்த்திகளையும், சமயகுரவர் நால்வரையும் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

9. விக்கினேசுரரைத் தரிசிக்கும்பொழுது யாது செய்தல் வேண்டும்?

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு மூன்றுமுறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

பிரதக்ஷிணஞ் செய்து சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து மூன்று முறை கைகொட்டிச் சிவதரிசனபலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்து வலமாக வந்து இடபதேவருடைய இரண்டு கொம்பினடுவே சிவலிங்கப் பெருமானைத் தரிசித்துப் பலிபீடத்துக்கு இப்பால் மும்முறை நமஸ்கரித்து எழுந்து இருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நூறு தரமும் அகோர மந்திரத்தை நூறு தரமுஞ் செபித்துக்கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

11. அம்மையார் திருக்கோயில் வேறுபிருக்கின் யாது செய்தல் வேண்டும்?

அம்மையார் திருக்கோயிலினுள்ளே போய் முன் சொல்லிய முறை பிறழாமற் பலிபீடத்துக்கு இப்பாலே நான்கு தரம் நமஸ்காரம் பண்ணி எழுந்து, இரண்டு கைகளையும் குவித்துக்கொண்டு நான்கு தரமுதலாக இரட்டுறு முறையிற் பிரதக்ஷிணஞ் செய்து மீண்டும் சந்நிதியையடைந்து நமஸ்காரம் பண்ணி எழுந்து, துவாரபாலகிகளைக் கும்பிட்டு அநுமதி பெற்று, உள்ளே புகுந்து விக்கினேசுரரைத் தரிசித்துத் தேவியார் சந்நிதியையடைந்து அருச்சனை முதலியன செய்வித்துத் தரிசனஞ் செய்து விபூதி, குங்குமம் முதலியன வாங்கித் தரித்துக்கொண்டு, மகேசுவரியையும் வாமை முதலிய சக்திகளையும், விக்கினேசுரர், சுப்பிரமணியர், முதலிய மூர்த்திகளையும் தரிசித்துச் சண்டேசுவரி சந்நிதியையடைந்து கும்பிட்டு மூன்று முறை கைகொட்டித் தேவி தரிசன பலத்தைத் தரும்பொருட்டுப் பிரார்த்தித்து, வலமாக வந்து சந்நிதியையடைந்து நான்கு தரம் நமஸ்கரித்து எழுந்து இருந்து தேவியாருடைய மூலமந்திரத்தை இயன்றமட்டுஞ் செபித்துக்கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

12. நித்தியமும் நியமமாக ஆலய தரிசனஞ்செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?

சோமவாரம், மங்களவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயகசஷ்டி, கந்தசஷ்டி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பிரதோஷ காலத்திலே சிவலிங்கப் பெருமானை எப்படித் தரிசித்தல் வேண்டும்?

இடப தேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்துச் சென்றவழியே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, கோமுகையைக் கடவாது, முன்சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்றும் திரும்பி, இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, அங்கு நின்றும் திரும்பிவந்து, இடபதேவரைத் தரிசியாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து திரும்பிவந்து இடப தேவரை தரிசித்து அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹர ஹர என்று சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கல் வேண்டும்.

14. பிரதோஷ காலத்திலே விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்யிற் பயன் என்னை?

கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும்; முத்தி சித்திக்கும்.

15. திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள் யாவை?

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், மூக்குநீர் சிந்துதல், பாக்குவெற்றிலையுண்டல், போசன பானம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டையிட்டுக்கொள்ளுதல், பாதரட்சையிட்டுக்கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துசத்தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், வீண் வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கே போதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், சுவாமிக்குப் பலிபீடத்துக்குமிடையே நமஸ்கரித்தல், அகாலத்திலே தரிசிக்கப் போதல், திரைவிட்டபின் வணங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் வணங்குதல், திருவிளக்கவியக்கண்டும் தூண்டாதொழிதல், திருவிளக்கில்லாத பொழுது வணங்குதல், உற்சவங்கொண்டருளும்பொழுது அங்கேயன்றி உள்ளே போய் வணங்குதல் முதலியவைகளாம். இக்குற்றங்களுள் ஒன்றையறியாது செய்தவர் அகோர மந்திரத்தில் ஆயிரம் உருச்செபிக்கின் அக்குற்றம் நீங்கும். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

மேலே கூறப்பட்ட சிவாலய தரிசன விதிகளில் தற்கால நடைமுறைகளின்படி கைக்கொள்ளப்படாதவைகள் பற்றியும் வேறும் சிந்திக்கவேண்டிய விஷயங்கள் பற்றியும் ஒரு பெரியாருக்கும் ஒரு மாணவனுக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணை முறையில் சிலவற்றை ஆராய்வோம்.

**மாணவன் :** (ஒரு சைவப்பெரியாரை அடைந்து வணங்கி) யான் சில சந்தேகங்களை வினவியறிய வந்துள்ளேன். விடை தருவீர்களா?

**பெரியார் :** நல்லது; உமது சந்தேகங்களைக் கூறும். பார்ப்போம்.

**மாணவன் :** ஆலயத்திற் பலிபீடம் ஏன் வைக்கப்பட்டிருக்கின்றது? அதனைப்பற்றிச் சிறிது விளக்குங்கள்.

**பெரியார் :** பலிபீடத்துக்குப் பத்திரலிங்கம் என்று பெயர். அதுவும் சிவத்தையே குறிக்கும். அதிலே நாம் நம்முடைய அகங்காரத்தைப் பலிசெய்து ''நம் செயல் ஒன்றுமில்லை; எல்லாம் சிவன் செயலே'' என்று தெளிவதற்காகவே வைக்கப்பட்டிருக்கிறது.

**மாணவன் :** நந்தி ஏன் வைக்கப்பட்டிருக்கிறது?

**பெரியார் :** சுத்தமாக்கப்பட்ட ஆன்மாவைக் குறிப்பதே நந்தியாம். பாசங்களினின்றும் நீங்கிய ஆன்மாவானது சிவமாகி அருளுருவம் பெற்று அவரோடு ஒன்றாக நிற்கும் என்பதை அது காட்டுகின்றது.

**மாணவன் :** துசத்தம்பம் பற்றிச் சிறிது கூறுங்கள்.

**பெரியார் :** துசம் என்பது கொடி. துசத்தம்பம் என்பது கொடிமரம் ஆகும். கொடிமரம் சிவம் என்றும், பசு எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும், தர்ப்பைக் கயிறு பாசம் என்றும் சிவாகமம் சொல்லுகிறது, கடவுளிலே ஆன்மா தங்கியிருப்பது போலக் கொடிமரத்திலே சீலை தங்கியிருக்கிறது. கொடிமரமும் சீலையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று இரண்டு பொருள்கள் இருந்தாலும் அதைப் பார்க்கிறவர்கள் கொடிமரம் என்று ஒரே பொருளாக மதிக்கிறார்கள். சிவமும் ஆன்மாவும் அத்துவிதமென் பதை இது விளக்குகிறது. தர்ப்பைக் கயிறு சீலையைச் சுற்றியிருப்பது போலப் பாசம் ஆன்மாவைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. பதி, பசு, பாசம் என்னும் முப் பொருட் சம்பந்தங்களைக் கொடிமரத்திலே காண லாம்.

**மாணவன் :** வாகனாதிகளின்றி நடந்து போவதென்பது தற்காலத் துக்குப் பொருந்துமா?

**பெரியார் :** கஷ்டப்பட்டுப் போவது சிறந்ததேயாகும். ''பழை யன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்றதற்கிணங்க வாகனங்களிற் செல்வதைப் பெரிய தவறெனக் கொள்ள முடியாது.

**மாணவன் :** கோயில்களிலே ஆண்கள் எந்தப்பக்கத்தில் நின்று வணங்கவேண்டும்? பெண்கள் எந்தப்பக்கத்தில் நின்று வணங்கவேண்டும்? என விதி உண்டா?

**பெரியார் :** நூல்களிலே பொதுவாக ஒரு பக்கமே குறிப்பிடப் பட்டிருக்கிறது. பெருந்தொகையாக வணங்குபவர் கள் வரும் ஆலயங்களில் ஆண்கள் ஒருபக்கமும் பெண்கள் மறுபக்கமும் நின்று வணங்கும் வழக்கம் நெடுங்காலமாக நடைமுறையில் இருந்துவருகிறது. எனினும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய் வதற்குப் பிரதான பக்கத்துக்கே வருவது வழக்கம்.

**மாணவன் :** வடக்கு நோக்கிய சந்நிதியில் பிரதான பக்கம் எது?

**பெரியார் :** மேற்குப் பக்கமே பிரதான பக்கமாம்.

**மாணவன் :** ஒவ்வொரு மூர்த்திகளுக்குமுரிய தோத்திரங்கள் சில கூறுங்கள்.

**பெரியார் :** தேவாரம், திருவாசகம் முதலாகிய திருமுறைகள் எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவானவை. ஒவ்வொரு மூர்த்திகளுக்கும் சிறப்பான தோத்திரங்கள் சில வற்றை இறுதியில் தருகின்றேன்.

**மாணவன் :** பெருந்தொகையாக வணங்குவோர் வருங்காலங்களில் தீபங்களையோ, மூர்த்தியையோ பார்க்கமுடியாத நிலை ஏற்பட்டால் யாது செய்தல் வேண்டும்?

**பெரியார் :** பின்னுக்கு அமைதியாக நின்று மனத்தால் நினைத்து வழிபடல் வேண்டும்.

**மாணவன் :** இரண்டு வஸ்திரம் தரித்துக்கொண்டு ஆலயத்துக்குச் செல்லுதல் வேண்டுமெனச் சிலர் கூறுகிறார்களே அதன் கருத்து என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார் : வேட்டியும் சால்வையும் அணிவதுதானே தமிழரது நெடுங்காலவழக்கம். அதனையே இங்கே இரண்டு வஸ்திரம் எனக்குறிப்பிடுகின்றூர்கள். வேட்டியும்சால்வையும் சிவமும் சக்தியுமென அறிஞர்கள் கூறுகின்றனர்.

மாணவன் : அருச்சனைப் பொருள்கள் இல்லாமற் கோவிலுக்குப் போகக்கூடாதா?

பெரியார் : வெறுங்கையுடன் கோயிலுக்குப் போதல் ஆகாது என்பதுதான் விதி. அருச்சனைப் பொருள்கள் இல்லாவிடின் பத்திர புட்பங்கள் கொடுத்து வணங்கலாம். அதுவும் முடியாவிடின் ஆலயத்திலுள்ள கஞ்சல்களைக் கூட்டுதல், புல்பூண்டுகளைச் செதுக்கிச் சுத்தம் செய்தல் முதலாகிய தொண்டுகளைச் செய்து வணங்கல் வேண்டும்.

மாணவன் : பிரதட்சிணம் செய்வதில் வேறுபாடுகள் உண்டா?

பெரியார் : ஆம். சிவபெருமானை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து, இருபத்தொரு தரமும் விநாயகரை ஒரு தரமும், சூரியனை இரண்டு தரமும், பார்வதிதேவியாரையும் விட்டுணுவையும் நான்கு தரமும் பிரதட்சிணம் பண்ணல் வேண்டுமென நூல்கள் கூறுகின்றன.

மாணவன் : சண்டேசுரரை வணங்கும்போது சீலையின் நூலைப் பிடுங்கிப் போடுதல் சரியா?

பெரியார் : அது தவறான செயலே, ஒருவர் செய்வதைப் பார்த்து மற்றவர்களும் செய்துவிடுகிறூர்கள்.

மாணவன் : நவக்கிரகங்களை வணங்கும்போது படிக்கக்கூடிய பாடல்கள் எவை?

பெரியார் : கோளறுபதிகம் படிக்கலாம்.

மாணவன் : அபிஷேகம் நடைபெறும்போது பிரதக்ஷிண நமஸ்காரமும் செய்யக்கூடாதா?

பெரியார் : உட்பிரகாரத்திலே செய்யக்கூடாது.

மாணவன் : ஆலயத்திலே வணங்குபவர்களும் தொண்டு செய்பவர்களும் பயபத்தியுடையவர்களாக இருத்தல் வேண்டுமென்று சொல்கிறூர்களே. அதனைச் சிறிது விளக்கமாகச் சொல்லுங்கள்.

பெரியார் : ஆலயத்திலே குற்றம் செய்பவர்கள் எப்பொழுதோ கடவுளாலே தண்டனை பெறுவார்கள். ஆதலால் குற்றம் செய்வதற்குப் பயப்படவேண்டும். இறைவன் எமது நன்மைக்காகவே தனு, கரண, புவன, போகங்களைத் தந்திருக்கிறூர். கைம்மாறு கருதாது அவர் செய்யும் பெருங்கருணைச் செயல்களுக்காக நாம் அவர்மாட்டுப் பத்தி செலுத்தவேண்டியது எமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# தோத்திரத் திரட்டு

## விநாயகக் கடவுள்

### விருத்தம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். 1

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைபடுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம். 2

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம். 3

## சிவபெருமான்

(தேவார, திருவாசகங்கள் எதுவும் படிக்கலாம்.)

### திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டுகொண் டருளிய வமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார். 4

ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனைமார்க் கண்டற்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமா னேயென்றார். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைபொழிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான். 6

சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கி லுமையாளு மெம்மருக்கும் பூதகணம்
புடைநெருக்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான். 7

## உமாதேவியார்

### விருத்தம்

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம். 8

### கட்டளைக் கலித்துறை

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே. 9

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே. 10

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதெந்னம் மேபுவி யேழையும் பூத்தவளே 11

## சபாபதி (நடராசர்)

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. 13

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி. 14

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி. 15

## சிவகாமியம்மையார்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. 16

## தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம். 17

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ. 18

## வைரவக் கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திரக் கடவுள்

அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம். 20

## சுப்பிரமணியக் கடவுள்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி. 21

அருவமு முருவு மாகி யநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய. 22

முழுமதி யன்ன வாறு முகங்களு முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறும் அணிமணித் தண்டை யார்க்குஞ்
செழுமல ரடியுங் கண்டான் அவன்றவஞ் செய்பற் பாற்றே. 23

(கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை,
கந்தபுராணம் என்பவற்றிலுள்ள பாடல்களும் படிக்கலாம்.)

## திருநந்திதேவர்

ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம். 24

## சமயகுரவர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. 25

## அறுபத்துமூவர்

தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்த்த நிரமய
சித்து மூர்த்திதன் றாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டேசுரர்

மறைதிகளுக் கெட்டாத பரமா னந்த
வாழ்வினையங் கோரிலிங்க மணலாற் கூப்பித்
தறைதியந் தனினின்றுந் தாபித் தான்பால்
தழைத்தவன்பா லாட்டவந்து தடுக்கத் தாதை
எறைதவன்ற லிருபதமு மழுவாற் றுண்டித
திகழ்ந்தவனைப் பரபதத்து ளிருத்தித் தானும்
பிறையியரு ளடைந்தவிறற் சண்டே சன்றாள்
பிரசமல ரிறைத்திறைஞ்சிப் பரசு வாமே. 27

## மகாவிஷ்ணுமூர்த்தி

சிதராவுமை சோதராவெம திதராவர நாமதா
மோதராவன மாலைசூடு முகுந்தராச சகுந்தமூா
நாதராவணை னைக்கடிந்திடு நாரணாதழ றுறுகட்
காதராவனை மீதுகண்டுயில் கண்ணனேமணி வண்ணனே. 28

அச்சுதாமுக மச்சுதாகர னன்னகோதை யசோதைதன்
கச்சுலாமுலை யுண்டுபண்டவன் கையனைத்துயில் கொண்டிடு
மெய்ச்சுதாபசு மைச்சுவாசக மென்மொழித்திரு நாயகர்
நச்சுவாயர வுச்சிமீது நடித்திடும்பத நளினனே. 29

காயாம்பூங் காயாமுன் காய்விளவிற் கன்றெறிந்த
நேயாமா யாவேயா னிள்புறவி னிரைகுவிக்கும்
ஆயாவல் லகிப்பாயா ஐவர்சகா யாபவள
வாயாபே யாவிமுலை மண்ணுண்ட மாதவனே 30

கோல ரூபா மயிலையுருக் கொண்டநாதா கொடுங்கொலைக்குக்
கால ரூப நிகர்நார கண்டீ ரவகச் சபரூபா
வால ரூபா கவிண்றருவா மனவாண் மழுக்கொள் வரராமா
நீல ரூபந்தருராமா நிலவு வெண்ணை நிறராமா. 31

## இலக்குமி

கொழுதியிசை யளிமுரலுந் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கை போல
மழையுறழுந் திருமேனி மணிவண்ண
னிதய மலர் வைகு மானே
முழுதுலகு மிலிதின்ற வருட்கொம்பே
கரகமல முகிழ்த்தெந் நாளுங்
கழிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதிர
வருள் கொழிக்குங் கமலக் கண்ணாய். 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருடுரக்கு மலர்கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டு
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குநீ யவணன்றே மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்ப தம்மா. 33

## சரஸ்வதி

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம். 34

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். 35

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசகம் மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித் தாகவுண் டாகும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கருப்பே சகல கலாவல்லியே. 36

## சனிபகவான்

கருநிறங் படைத்தாய் போற்றி காளமுண் டிருண்ட கண்டத்
தொருவனே நிகர்ப்பாய் போற்றி ஊனகன் றுலர்ந்த யாக்கைத்
திருமலி செல்வ போற்றி செறிசடைக் கற்றையோடு
வருமுகத் துரோமந் தாங்கி மன்னிய தெய்வம் போற்றி. 37

வேலவனை வேங்கைமர மாக்கி வைத்தாய்
விறகுகட்டுச் சொக்கர்தமை விற்க வைத்தாய்
மாலவனை யுரலோடு கட்டு வித்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில் வைத்தாய்
காலனைமாக் கண்டனுக்கா வரனு தைத்த
காரணமு நீபிடித்த கருமத் தாலே
சாலவுனை யான்தொழுதே னெனைத் தொடாதே
சனியனே காகமேறுந் தம்பி ரானே. 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கை

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 39

ஆத்தாளை யெங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங் குசமும் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே. 40

(அபிராமி அந்தாதிப் பாடல்கள் எவையும் படிக்கலாம்.)

சிவாலய தரிசனவிதி முற்றிற்று.

---

உ

## நன்றி நவிலல்

சிவாலய தரிசனவிதி என்னும் இச்சிறுநூலை எழுதும்படி தூண்டிய சைவாபிமானி அவர்களுக்கும், இந்நூலை எழுதுவதிற் சில ஆலோசனைகளை வழங்கிய அறிஞர்களுக்கும், எனது வேண்டுகோளை மனப்பூர்வமாக ஏற்று ஆசியுரையும் வழங்கி அச்சிடும் செலவையும் தர முன்வந்த மாவை ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்களுக்கும், மிகக்குறுகிய காலத்தில் அழகாக அச்சிட்டுதவிய தெல்லிப்பழை குகன் அச்சகத்தினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

28 - 10 - 88 ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org